**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**
**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் நாள் திங்கள்கிழமை**

**<u>இ.ம.எண். 2/2022 இன் அ.வ.எண்.267/2020</u>**

K.முருகேசன் . . . மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. கண்காணிப்பு பொறியாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
2. உதவி செயற்பொறியாளர்
இயக்கமும் பராமரிப்பும்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
3. இளமின் பொறியாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
4. பானுமதி . . .
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 19.9.2022 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.V.ரகு, அவர்கள் ஆஜராகியும், 4 ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.S.கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல்3 எதிர்மனதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக தாவாவில் மனுதாரர்கள் கட்சியை நிருபணம் செய்ய சேந்தமங்கலம் வட்டாட்சியரை விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச்

சட்டம் கட்டளை 16 விதி 1–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:**

நான் இம்மனுவில் மனுதாரர்/தாவாவில் வாதி. மனுதாரர் எதிர்மனுதாரர்கள் பேரில் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது தாவாவில் வருவாய் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்றும் அவைகள் மனதாரரின் வழக்கிற்கு முன்னியமான ஆவணங்கள் என்றும் அதனால் தாவாவில் வருவாய் ஆவணங்களை பொறுத்து சேந்தமங்கலம் வட்டாட்சியரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும் இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரை:**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மின்சார வாரியத்தின் மீதும் இவ்வெதிர்மனுதாரர் மீதும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மிகவும் காலம் கடந்து ஏதோ வருவாய் ஆவணங்கைள குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று கூறியிருக்கும் சங்கதிகள் வழக்கிற்கு தேவையற்றவையாகும். மனுதாரர் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மேற்படி வழக்கில் இறுதி முடிவு எட்டக்கூடாது என்ற நோக்கத்திலும், இவ்வெதிர்மனுதாரரை மனவேதனைக்கும் கஷ்ட நஷ்டத்திற்கும் வீண் அலைக்கழிப்புக்கு ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்திலுமே மேற்படி மனுவை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார். ஆகவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால்**

<u>மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.</u>

மனுதாரர்/வாதி தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக மனுதாரர் கட்சயை நிரூபணம் செய்ய சேந்தமங்கலம் வட்டாட்சியரை விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரின் பிரமாண பத்திரத்தில் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் பேரில் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாவில் வருவாய் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்றும் வருவாய் ஆவணங்கள் வாதியின் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும் ஆகவே மனுதாரரின் கட்சியை நிரூபணம் செய்ய சேந்தமங்கலம் வட்டாட்சியரை விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரை தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகி உத்தரவிடப்பட்டுள்ளது. 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுவுரையில் மனுதாரர் மின்சார வாரியத்தின் மீதும், இவ்வெதிர்மனுதாரர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். காலம் கடந்து வருவாய் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று கூறியிருக்கும் சங்கதிகள் வழக்கிற்கு தேவையற்றது என்றும் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், வழக்கில் இறுதி முடிவு எட்டக்கூடாது என்ற நோக்கத்திலும் இவ்வெதிர்மனுதாரரை மனவேதனைக்கும், கஷ்ட நஷ்டத்திற்கும் வீண் அலைக்கழிப்புக்கும் ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, தாவா கடந்த 31.10.2017 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தரப்பில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் பேரில் பூந்தோட்ட மின் இணைப்பு வழங்க செயலுறுத்துக் கட்டளை

உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 4ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கேட்கப்படவில்லை என்பது வழக்கு ஆவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அசல் தாவா தற்போது வாதி தரப்பில் இதர சாட்சிகளை விசாரிக்க 7.3.2022 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் பிரமாண பத்திரத்தில் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்கவும், வருவாய்த்துறை ஆவணங்களைப் பொறுத்து வட்டாட்சியரை விசாரணை செய்ய வேண்டியதாக உள்ளது என்றும் வாதிடப்பட்ட சங்கதிகள் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. மனுதாரரின் பிராதை ஆராய்ந்து பார்க்கும் போது வாதி வருவாய்த்துறை ஆவணங்கள் பெற்று 3ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளதாக சங்கதிகள் கூறப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சங்கதிகளை பொறுத்து மனுதாரர் / வாதி அவரது கட்சியை நிரூபிக்க சேந்தமங்கலம் வட்டாட்சியரை வருவாய்த்துறை ஆவணங்கள் சம்பந்தமாக விசாரிக்க அனுமதி வழங்கக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது.

மேலும் இம்மனு அனுமதிக்கப்பட்டால் அதனால் 4ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாரபட்சமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், தரப்பினர்களுக்கு அவர்களது சாட்சியை விசாரிக்கவும், ஆவணங்கள் தாக்கல் செய்யவும் உரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இயற்கை நீதி கொள்கை அடிப்படையிலும், மனுதாரரின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தேசிக்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2022ம் வருடம் செப்டம்பர் மாதம் 19ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.09.21 15:49:11 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** ––இல்லை––
2. **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** ––இல்லை––

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.09.21 15:49:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**